பக்கங்கள்: ஆறு

File-(10)

Registered as a Newspaper

A/L 91
பௌதிகவியல்
திரு. சோதிலிங்கம்
இரசாயனவியல்
திரு. சண்
தூய/பிரயோக கணிதம்
திரு. வெக்டர்
விலங்கியல்
திரு. கெங்காதரன்
தாவரவியல்
திரு. பாலா
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்,
இருபாலை.

# உதயன்

விலை
ரூ 2.50

A/L 91
பொருளியல்
திரு. லோகசிங்கம்
கணக்கியல்
திரு. மரியதாஸ்
வர்த்தகம்
திரு. தேவா
அளவையியல்
திரு. விக்கி
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்,
இருபாலை

சுடர் 4 விபவ ஸூ பங்குனி மீ 24 உ. வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 ஷஃபா பிறை 27 (06 - 04 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-103

# தெற்கிலும், மேற்கிலும் ஹர்த்தால் பூரண வெற்றி!

## இயல்பு நிலை நேற்று முற்முக ஸ்தம்பிதம் பரவலாக வன்செயல்கள்; உயிரிழப்புக்கள்

கொழும்பு, ஏப்ரல் 6

ஜே. வி. பி. இயக்கத்தினர் விடுத்த அழைப்பைத் தொடர்ந்து தென்னிலங்கையில் நேற்று இடம்பெற்ற ஹர்த்தால் பூரண வெற்றி அளித்தது.

கொழும்பிலும், குறிப்பாக தென்மாகாணத்திலும், தென் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் நேற்று இயல்புநிலை முற்முக ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

அரசாங்க சேவைகள் தனியார் சேவைகள் நேற்று முற்முக ஸ்தம்பித்தன. போக்குவரத்தும் அவ்வாறே. வாகன நடமாட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. மக்கள் நடமாட்டமோ மிகமிகக் குறைவு.

கொழும்பில் அரசாங்க ஸ்தாபனங்களிலும், தனியார் ஸ்தாபனங்களிலும் பாதுகாப்புப் படையினர் காவல் புரிந்தனர். வீதிகளிலும் வாகனங்கள், மக்களின் நடமாட்டத்துக்குப் பதில் ஆயுதப் படையினரின் ரோந்து நடவடிக்கையே அதிகமாகக் காணப்பட்டது.

ஹர்த்தால் பூரண வெற்றி அளித்த அதேவேளை, தெற்கிலும் மேற்கிலும் பரவலாக வன்செயல்கள் இடம்பெறவே செய்தன.

குண்டுவெடிப்பு, பஸ்கள், ரயில்களுக்குத் தீ வைப்பு, துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் என்பனவற்றின் விளைவாக உயிர்ச்சேதங்களும், உடைமைச் சேதங்களும் ஏற்பட்டன.

ஜே. வி. பி. யினர் தமது ஏப்ரல் கிளர்ச்சியின் பதினெட்டாவது நிறைவு தினத்தையொட்டி அழைப்பு விடுத்த ஹர்த்தாலை ஒட்டி நேற்று கொழும்பு மற்றும் மேற்குப் பகுதியிலும், தென் மாகாணத்திலும் இடம் பெற்ற சம்பவங்களில் குறிப்பிடத்தக்கவை வருமாறு:—

★ காலியில் நேற்று இடம் பெற்ற சம்பவம் ஒன்றில் இலங்கை இராணுவ லெப்டினன்ட் ஒருவரும் சிப்பாய் ஒருவரும் உயிரிழந்தனர்.

அதிகாரியின் பெயர் லெப்டினென்ட் பந்துலபண்டார.

குண்டு ஒன்றை வெடிக்க வைக்க முயற்சித்த போது இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. ஒரு சிப்பாய் காயமடைந்தார்.

★ பொல்காவலையில் ரயில் பெட்டி ஒன்றுக்கு தீ வைக்கும் முயற்சி இடம்பெற்றது. ஆயுதப் படையினர் அதனை முறியடித்தனர்.

★ அளவ்வை என்னுமிடத்தில் வாசிகசாலைக் கட்டடம் ஒன்று இனந்தெரியாதவர்களினுல் எரிக்கப்பட்டது.

★ அம்பலாந்தோட்டையில் ஜெலிக்நைற் வெடி

[6ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். வந்த பஸ்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

யாழ்ப்பாணம் நோக்கிவந்த பல தனியார் பஸ்கள் மீது நேற்றுத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக அறியவந்துள்ளது.

செவ்வாய்க்கிழமை இரவு கொழும்பில் இருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்தபஸ்களே அனுராதபுரம், மதவாச்சிப் பகுதிகளில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகின.

எனினும் பயணிகள் எவரும் தெய்வாதீனமாகக் காயம் அடையவில்லை.

இதேவேளை வேறு சில வாகனங்கள் கல்வீச்சுக்கு இலக்காகின. மேலும் சில வாகனங்களின் சில்லுகளிலிருந்து காற்றுப் போகும்படி விஷமத்தனம் புரியப்பட்டது.

(ஓ-9-10)

## பருத்தித்துறை பொலீஸ் கான்ஸ்டபிள் தற்கொலை

### தன்னைத்தானே சுட்டுக் கொண்டாராம்

பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவர் நேற்றுக்காலை தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

மரணமானவர் வாரியப்பொலயைச் சேர்ந்தவர்.

சென்றி கடமையில் இருந்தபோதே அவர் தற்கொலை புரிந்து கொண்டதாக பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது தற்கொலைக்கான ஊர்ஜிதமான காரணம் தெரியவில்லை

(ஓ-160)

## மிருசுவில், உசன் பகுதிகளில் நேற்றும் தீவிர தேடுதல்

யாழ்ப்பாணம், ஏப். 6

மிருசுவில், உசன் பகுதிகள் நேற்றும் இந்திய அமைதிப் படையினுல் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கை தொடரப்பட்டது.

இப்பகுதிகளில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் சிலர் மரணமடைந்ததாகவும் அதை அடுத்து தேடுதல் நடவடிக்கை தீவிரமாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மிருசுவில், உசன் பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் மாலை 6 மணிக்கு அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

நேற்றைய சுற்றிவளைப்பின் போது சிலர் தாக்கப்பட்டதாகவும் புகார் சொல்லப்பட்டது.

(ஓ-10)

## வரணியில் 10 வயதுச் சிறுமி மர்மமானமுறையில்கொலை!

வல்வெட்டித்துறை, ஏப். 6

வரணி அம்மா கடையடிக்குச்சமீபமாக உள்ளஓர் இடத்தைச் சேர்ந்த பத்து வயதுச் சிறுமி ஒருவர் கழுத்துத் திருகப்பட்டு மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டதாக அறியவருகிறது

உறவினர்களால் மந்திகை வைத்தியசாலைக்கு இச்சிறுமியின் உடல் எடுத்துவரப்பட்டதாகவும் —

அங்கு சிறுமி இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து உறவினர்கள் சிறுமியின் சடலத்துடன் மறைந்து விட்டதாகவும்—

இதுதொடர்பாக மேலதிக தகவல்கள் எதனையும் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சிறுமி குழந்தை இல்லாத ஒருவரினுல் வளர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[உ-160]

## டெலக்ஸ் பழுதடைந்ததால் சிமெந்து உற்பத்தி பாதிப்பு

கொழும்பு, ஏப்ரல் 6

இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனத்தின் தலைமைக் காரியாலயத்தில் உள்ள டெலக்ஸ் தகவல் தொடர்பு சாதனம் பழுதடைந்திருப்பதால் சிமெந்து உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

சிமெந்து உற்பத்திக்குத் தேவையான கிளிங்கர் மற்றும் மூலப் பொருள்களை வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்கள் கூட்டுத்தாபனத்துடன் தொடர்பு கொண்டு அவற்றை அனுப்பமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

இதன் காரணமாக 60 சதவீத சிமெந்து உற்பத்தி பாதிக்கப்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள நான்கு சிமெந்து தொழிற்சாலைகளும் இயங்க முடியாதநிலைமை ஏற்பட்டுள்ளது.

நாட்டின் சிமெந்து உற்பத்தி ஆண்டுக்கு 13 லட்சம் தொன் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ - எ)

## மலையக மக்கள் வாக்குரிமை: மாத இறுதியில் சட்டமூலம்

கொழும்பு, ஏப்ரல் 6

இலங்கைக் குடியுரிமை பெற்ற மலையகத் தொழிலாளருக்கு வாக்குரிமை வழங்கும் சட்டமூலம் இம்மாதம் இறுதி வாக்கில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

அமைச்சரவை சட்டமூலத்திற்கு அங்கீகாரம் வழங்கிவிட்டதாக அமைச்சர் தொண்டமான் நேற்று முன் தினம் தெரிவித்தார்.

இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற்றுக்கு இந்திய சமூகப் பேரவை நேற்று முன் தினம் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் பிரியாவிடை விருந்துபசாரம் ஒன்றைஅளித்தது

அவ்வைபவத்துக்கு தலைமை வகித்துப் பேசுகையிலேயே அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார்.

(உ-எ)

## யாழ்ப்பாணத்துக்கு நேற்று படை எடுத்து வந்தவர்கள்!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

கொழும்பில் தனியார் நிறுவனங்களில் பணி புரியும் தமிழ் ஊழியர்கள் நேற்று பெரும் எண்ணிக்கையில் யாழ்ப்பாணத்துக்குப் 'படை' எடுத்து வந்து சேர்ந்தனர்!

ஜே. வி. பியின் ஒரு வார ஹர்த்தாலையொட்டி பல தனியார் நிறுவனங்கள் எதிர்வரும் 12ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்கும். அடுத்து வருபவை புதுவருட விடுமுறைகள்; சேர்ந்து வருபவை வார இறுதி விடுமுறைகள்.

மொத்தம் உள்ள பத்துநாள் விடுமுறையைப் போக்கவே அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விரைந்தனர்.

கொழும்பிலிருந்து செவ்வாய்க்கிழமை பயணம் புறப்பட்ட பஸ்களில் இங்கு வந்து சேர்ந்தவர்களில் 75 சதவீதமானேர் தனியார், அரச ஊழியர்களே!

தனியார் துறை ஊழியர்கள் விடுமுறையில் வந்தார்கள் என்ருல், அரச ஊழியர்கள் ஒருவாறு ''சரி செய்து'' லீவு போட்டு வந்தவர்களாவர்!!

(அ-9)

## வரட்சி நிவாரணமாக மாதம் ஏழரை கிலோ அரிசி

### புத்தாண்டுக்கு முன்னர் கிடைக்கும்

கொழும்பு, ஏப்ரல் 6

வடக்கு, வடமத்திய மாகாணங்களில் வரட்சியால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் மாதாந்தம் ஏழரைக் கிலோ அரிசி கஷ்டநிவாரணப் பொருளாக வழங்கப்படும்.

தமிழ், சிங்கள புதுவருடப் பண்டிகைக்கு முன்னதாகவே கஷ்டநிவாரண உதவிகளை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

மன்னுர், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் ஒரு லட்சத்து 70 ஆயிரம் குடும்பங்கள் வரட்சியால் பாதிக்கப்பட்டு உள்ளன.

அரிசியைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக வரட்சி நிவாரண முத்திரைகள் வழங்கப்படும்.

மாவட்ட சமூக சேவைகள்

[6ஆம் பக்கம் பார்க்க]

### சுபநேரம்

06 - 04 - 1989

பங்குனி - 24 வியாழக்கிழமை

சுபநேரம்:
07 - 38 முதல் 09 - 08 வரை

ராகுகாலம்:
01 - 38 முதல் 03 - 08 வரை

## முச்சந்தி முரளி



அப்ப, சாமி விடை குடுத்தாலும் பூசாரி விடை குடுக்காத சமாச்சாரம் யாழ்ப்பாணத்திலைதான் அச்சொட்டா நடைமுறையிலை இருக்குது எண்டு சொல்லுங்கோ ...!

## பஸ் நடத்துனர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

கொடிகாமத்தைச் சேர்ந்த பஸ் நடத்துனர் ஒருவர் நேற்று நாவலர் வீதியில் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

கந்தையா கனகசிங்கம் [வயது 30] என்பவரே கொலையுண்டவராவார்.

(ஓ-10)

## யானைகளின் அட்டகாசத்துக்கு 32 பேர் பலி

கொழும்பு ஏப்ரல் 6

வடமுனை, வாகனேரி, புனைனை ஆகிய காட்டுப் பகுதிகளில் யானைகளின் அட்டகாசத்தினுல் கடந்த மூன்று மாதத்தில் 32 பேர் உயிரிழந்தனர், என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## சட்டசபையில் இளைஞர் கைது

சென்னை, ஏப்ரல் 6

தமிழக சட்டசபைக் கூட்டம் நடந்துகொண்டிருந்த சமயம் கலரியில் இருந்து துண்டுப்பிரசுரங்களை வீசிய ஓர் இளைஞரை காவலர்கள் கைது செய்தனர்.

சபாநாயகரின் உத்தரவின் மீது சபைக் கூட்டம் அன்று முடிவடையும் வரை அந்த இளைஞர் சிறைவைக்கப்பட்டார்.

(ஓ-எ)

## புனர்வாழ்வு நிவாரணம் பெற ஓய்வூதியக்காரரும் தகுதி!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித் திட்டங்களைப் பெறுவதற்கு ஓய்வூதியக்காரர்களுக்கும் உரிமை உண்டு.

அதாவது அரசாங்கத்தின் புனர்வாழ்வுத் திட்ட நிவாரண உதவிகளைப் பெறுவதற்கு ஓய்வூதியக்காரர்களும் அருகதை உடையவர்களே.

இதனை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளர் திரு. திலக் சந்திரசேகரா தமது எம்.ஆர்.ஆர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் வங்கி கிளைகளுக்கு பலத்த பாதுகாப்பு

கொழும்பு, ஏப்ரல் 6

தென் இலங்கையில் உள்ள மக்கள் வங்கியின் கிளைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

அடுத்த சில தினங்களில் தீவிரவாதிகள் மக்கள் வங்கிக் கிளைகளைக் கொள்ளையடிக்கத் திட்டமிட்டிருப்பதாக புலனுய்வு அறிக்கைகள் தெரிவித்திருந்தன.

அதைத் தொடர்ந்தே இந்த உஷார் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[ஓ-எ]

## அ.தி.மு.க உறுப்பினர்கள் நேற்றும் வெளிநடப்பு

சென்னை, ஏப்ரல் 6

தமிழ்நாடு சட்டசபையில் நேற்றும் அ. தி. மு. க வைச் சேர்ந்த எம். எல். ஏக்கள் இரண்டுமுறை வெளிநடப்புச் செய்தனர்.

ஒத்திவைப்பு பிரேரணை எடுக்கப்பட்ட சமயம் எதிர்க்கட்சித் துணைத்தலைவர் திரு. திருநாவுக்கரசு, சட்டசபையில் சென்ற மாதம் 25 இல் நடந்த அமளிதுமளிக்கு பொறுப்பேற்று கருணநிதி இராஜினமாச் செய்யவேண்டும் என்று கூறினர்.

அவரது உரைக்கு சபாநாயகர் இடமளிக்கவில்லை. அதைத் தொடர்ந்து அ. தி. மு. க எம். எல். ஏக்கள் வெளிநடப்புச் செய்தனர். சிறிது நேரத்தில் மீண்டும் சட்டசபைக்குத் திரும்பினர். பின்னர் முதலமைச்சரின் அறிக்கை ஒன்று சம்பந்தமாக இரண்டாவது தடவையாக வெளிநடப்புச் செய்தனர்.

(உ-எ)

## றுகுணு பல்கலைக்கழக மாணவர் 10பேரை காணவில்லை

கடந்த 2 மாதங்களில் றுகுணு பல்கலைக்கழக மாணவரில் பத்துப் பேர் காணுமற் போய்விட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி பாதுகாப்பு அமைச்சுக்கும் பல்கலைக்கழக மான்யக் கமிஷனுக்கும் அறிவித்துவிட்டதாக றுகுணு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சிறிநல் ரணவெல தெரிவித்தார்.

(உ-எ)

## இது புதிய செய்தி!

புத்தாண்டுடன் மலருகிறது புதிய சஞ்சிகை!!

**உதயன்**

வெளியீட்டகத்திலிருந்து

**மற்றொரு மாத மலர்!**

நாளைய உதயனில்

விவரங்கள்...!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ரம்பூர்ரக பூரண விளைத் திறனுடைய பம்பாய் வெங் காய விதை விற்பனைக்கு உண்டு. கிலோ 350. 00 ரூபா. பிள்ளையார் 251, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். [93]

---

பாவித்த அலுமாரி, கட்டில் ஒவ்விஸ் மேசை, சோக்கேஸ், T. V. D. பிறிச், சிங்கர்மெசின் Voltage Regulator, கண் ணாடி மேசைகள், மற்றும் பல விற்பனைக்கு உண்டு. 'Super'a 343, பருத்தித்துறைறோட், அரசடிச்சந்தி, நல்லூர். (10260)

---

National Video Deck Portable N.V 180, புதியதும், பாவித்ததும் விற்பனைக்கு உண்டு. மற்றும் National N.V-100, 1000 Watts வீடியோ லைற் சகலவிதமான Video Heads K.V. 2090 Sony T.V. சகலவிதமான வீடியோ உசற் வகைகளும் விற்பனைக்கு உண்டு. தொட ர்பு கொள்க, எவர்விஷன், 21A. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (C-2142]

### கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

(Cobb) புறொயிலர் குஞ்சு [Dekalb] பிறவுண் சேவல் குஞ்சு (பிலிமத்) கறுப்பு புள்ளி சேவல்குஞ்சு 5ஆம்திகதி புதன்கிழமை சகாய விலைக்கு விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னுகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில் [10244)

### கோழிக்குஞ்சு விநியோகம்

பிறிமாயின ஒரு நாள் வோமன் புறொயிலர்க்குஞ்சுகள் வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் 12 - 4 - 1989 இல் விநியோகிக்கப்படும். 10 - 4 - 89 க்கு முன் பதிவு செய்க. குஞ்சுகள் எடுப்பவர்களுக்கு மருந்துகள் இலவசமாக வழங்கப்படும். (1) திருமகள் ஸ்ரோர்ஸ், சிவலிங்கப் புளியடி, (2) கிருஷ்ணு பா சென்ரர், திருநெல்வேலிச் சந்தி, (3) C S. K. பாம் சென்ரர், கச்சேரியடி. (4) தட்டாதெருச் சந்தி. [80]

### இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற்கோழிகள், சூப் குஞ்சுகள், விருத்துக்குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் விற்பனை செய்யப்படும். (10728)

### காணி வீடு விற்பனைக்கு

நாவற்குளி உணவுக்களஞ்சியத்திற்கு அருகாமையிலும், கண்டிவீதியிலிருந்து 100யார் உள்ளேயும் 50 பரப்பு நெற் காணியுடன் மின்சார அமைப்புடைய வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஆ.ஆனந்தராசா, 7, விபுலானந்தர் வீதி கொழும்புத்துறை. [10283]

### தேவை

மினி தியேட்டர் நடத்துவதற்கு T. V, Video Deck Generator தேவை. தொடர்பு: V. தனபாலசிங்கம், (பபா) 15/7, முருகேசு ஒழுங்கை, நல்லூர் யாழ்ப்பாணம். [10281)

---

தமிழ், ஆங்கிலப் புறூவ்றீடர் தேவை. முன் அனுபவம் உடையவர்கள் மட்டும் 06, 07 -4.89 திகதிகளில் பி.ப 2. 30 - 4. 00 மணிக்கிடையில் நேரில் வரவும். செட்டியார் அச்சகம், 430, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். இருபாலாரும் விண்ணப்பிக்கவும். [C/2149]

---

பாவித்த பாவிக்கமுடியாத விகுடைசர்கள், Jarகள் மோட்டார்கள் மின்விசிறிகள், ஸ்ராட்டர்கள், Fridges, மின் உபகரணங்கள் தேவை. Omega, Manipay Road, Jaffna. (10456

### RAJZ BRAND தயாரிப்புகள்

வெளிநாடு செல்பவர்கள் தேடி வாங்குவது "RAJZ BRAND" எவர்சில்வர் தயாரிப்புகள் இலைத்தேய மேலைத் தேய உணவு வகைகளை தயாரிக்கக்கூடிய பலவகை தாச்சிகள், ஸ்ரீமர்கள், Frying Pan கள், நீண்ட கைப்பிடி கொண்ட இருபக்கமும் கைப்பிடி கொண்ட Sauce Panகள் இன்னும் பற்பல உங்கள் தேவையைக் குறிப்பிடுங்கள். அது எதுவாயினும் நிறைவேற் றக் காத்திருக்கின்றூர்கள் "RAJZ BRAND" உற்பத்தியாளர்கள். காட்சி அறை: S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னுகம். [சி/1899]

### விசேட கழிவு

சுக்கில வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணித பஞ்சாங்கம் எம்மிடம் தொகையாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். கூடுதலாக வாங்குவோருக்கும், வியாபாரிகளுக்கும் விசேட கழிவு. விற்பனையாளர்: மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (C/1574)

### ஆனந்தா தேயிலை

வந்துவிட்டது B. O. P. Fannings தேயிலை முன்கூட்டியே பதிவு செய்தவர்களுக்கும் வழக்கமான எமது வாடிக்கையாளர்களுக்கும் முன்னுரிமைஉண்டு. ஆனந்தார் ட்ரேடர்ஸ், டாக்டர் சுப்பிரமணியம் வீதி. கந்த ரோடை, சுன்னுகம். (81)

### வியாபார இடவசதி

யாழ். பஸ்ராண்டை அண்மித்த பகுதியில் கடைகள் உண்டு. தொடர்பு கொள்ளவும்: 478, மே/பா உதயன், மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (C/2129)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும். தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

### இடமாற்றம்

K. K. S வீதியில் அமைந்திருந்த சிறிலங்கா சலவைத் தொழிலகம் தற்போது சுன்னுகம் வாழைக்குலைச் சந்தை முன்பாக இடமாற்றம் அடைந்துள்ளதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றேன். நடராசா. (10724)

### தவறிவிட்டது

சென்ற வியாழக்கிழமை (30-3-89] 12. 30 - 1. 00 மணிக்குமிடையில் யாழ்ப்பாணத்திலிருந்து கீரிமலை நோக்கிச் சென்ற மினிபஸ்ஸில் (788, பாதை திருமுருகன் ரவல்ஸ்] எனது பெறுமதிமிக்க எவர்சில்வர் பொருள்கள் பெட்டியுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (86)

---

# NEW MASTER INSTITUTE

B. M. C. Lane, JAFFNA

## 89 A/L DAY CLASS

✶ ZOOLOGY ✶

திரு. நாகநாதன்

8.15 — பொருளாதார விலங்கியல்
3.00 — அசுஞ்சுரக்கும் தொகுதி

ஆரம்பம்: 06. 04. 89 வியாழன்

7.15 — வன்கூடு
2.00 — முளையவியல்

வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன. [சி-2145]

---

## இரணைதீவில் குடிதண்ணீர்ப் பிரச்சினை

முழங்காவில் ஏப்ரல் 6

தற்பொழுது நிலவும் வரட்சி காரணமாக இரணைதீவுக் கிராமத்தில் குடி தண்ணீர் மிகவும் குறைவாகக் காணப்படுகிறது.

பொதுமக்கள் 1 1/2 மைல் தூரம் சென்று கடற்கரைக்கு அண்மையில் உள்ள தண்ணீர் ஊற்றூரில் தண்ணீர் பெற வேண்டிய நிலையில் உள்ளனர்

கால் நடைகளும் குடிதண்ணீர் இன்றி இறக்கும் ஆபத்தில் உள்ளன.

எனவே இக் கிராமத்தில் ஆழ் குழாய்க் கிணறு அமைத்து குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்குமாறு இப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கம் கிளிநொச்சி அரசாங்க அதிபருக்கு[ மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது. [க)

## 18 எழுது வினைஞர்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

யாழ் கல்வித் திணைக்களத்திலிருந்து 18 எழுது வினைஞர்கள் வெளிமாவட்டங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதே வேளையில் வெளிமாவட்டங்களில் இருந்து 8 பேர் மட்டுமே யாழ். கல்வித் திணைக்களத்திற்குமாற்றலாகி வந்துள்ளனர்.

இந்த மாற்றங்கள் அடுத்த மாதம் முதல் அமுலுக்கு வரும்.

ஏற்கனவே எழுது வினைஞர் பற்றுக்குறை நிலவிவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ-9-113]

## கி. ச. தலைவர் சிரார்த்த தினம்

மண்டைதீவு ஏப்ரல் 6

மண்டைதீவுமுன்னுள்கிராம சபை தலைவர் கைலாசபிள்ளையின் எட்டாவது ஆண்டு சிரார்த்த தினத்தையொட்டி நினைவு தினக் கூட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

திரு. க. மாணிக்கலிங்கம் [ஓய்வுபெற்ற அதிபர்] தலைமையில் மண்டைதீவு மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இப்பகுதியைச் சேர்ந்த பொதுஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டு அன்னுரது சேவைகளைப்பற்றிப்பேசினுர்கள்.

மண்டைதீவு இந்து இளைஞர் திருமுறைக் கழக செயலாளர் திரு நல்லையா விஜயசுந்தரம் நன்றி கூறினுர். [க-88]

---

# BITSMANS INSTITUTES MANIPAY.

## A/L 91

அடிப்படை இரசாயனம்

ஆசிரியர்

திரு. மணியம்

BSc (Hons)

ஆரம்பம்: 7- 4- 1989

2. 00 p. m [05]

---

பூநகரி ப. நோ. கூ. சங்கம், பூநகரி.

வெற்றுச் சாக்கு

## கேள்வி விண்ணப்பம்

மேற்படி எமது சங்கத்தில் கீழ்க்காண் விபரப்படியான வெற்றுச் சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு உள்ளது. உரிய சாக்கு கேள்வி விண்ணப்பத்துடன் திரும்பப் பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 100/- செலுத்தப்பட வேண்டும். வைப்புப் பணம் செலுத்தாத கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

கேள்விகள் "பொது முகாமையாளர், பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், பூநகரி" என்ற முகவரிக்கு 14 - 04 - 89 ஆம் திகதிக்குமுன் பதிவுத் தபாலிலேயோ அன்றி நேரிலேயோ அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| மாவு சாக்கு 67 கிலோ | 1000 |
| அரிசி சாக்கு 67 " | 350 |
| அரிசி சாக்கு 112 படி நீலகோடு | 900 |
| சீனி சாக்கு 50 கிலோ | 175 |
| பல ரகம் | 75 |
| | 2500 |

— பொது முகாமையாளர்

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
பூநகரி,
01 - 04 - 89

[சி-2151]

---

## எமது ஒறிஜினல் வெளியீடுகள்

(1) ஆலயமணி "V- G- P-"
(2) ஆண்டவன் கட்டளை "V- G- P-"
(3) இருதுருவம் "V -G- P-"
(4) இரத்தத்திலகம் "SHANTH"
(5) அவன் தான் மனிதன் "SRIDEVI"

அனைத்தும் ORIGINAL பிரதிகள்

# குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665

(C/2150)

---

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# சோலைவரி அறிவித்தல்

### 1 ஆம் கந்தாயம் - 1989

1989 ஆம் ஆண்டு 1 ஆம் கந்தாயத்துக்கான வீதவரி அறவீடு 31 - 03 - 89 இல் முடிவடைந்தது. தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு குறிப்பிட்ட கந்தாயத்திற்குரிய வீதவரியைச் செலுத்தும் கால எல்லை 31 - 03 - 89 இல் இருந்து 30 - 04 - 89 வரை நீடிக்கப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இதுவரை வீதவரியைச் செலுத்தத் தவறியவர்கள் உடன் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இத் திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வீதவரிக்கு கீழ்க் குறிப்பிட்டவாறு மேலதிகமாக வெளியாத்துப் பணம் அறவிடப்படும்.

1. வெறுங்காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது — 15%
2. மற்றும் சகல ஏனைய இடங்கள் மீது — 20%

காசோலைகள், காசுக்கட்டளைகள், அஞ்சல் கட்டளைகள் 'யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரின்' சார்பில் அஞ்சல் சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முன்கூட்டியே அனுப்பப்படல் வேண்டும். அப்படியாக அனுப்பப்படும் போது வரியிறுப்பாளர்கள் ஆதனத்தின் தற்போதைய வரிமதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டாரத்தின் இலக்கம் முதலிய விபரங்களுடன் வரிப்பணத்தை அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்.

அன்ரன் அல்பிறட்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
5-04-1989.

[சி-2070]

---

ஹரன் வெண்திரையில்

✶ இப்பொழுது வெற்றிகரமாகக் காட்சியளிக்கிறது ✶

தினசரி 10.30 — 2.30 மட்டும்

கமலஹாசன் (இரு வேடம்)
ரேவதி — ரேகா
நடித்த
K. பாலச்சந்தரின்

## புன்னகை மன்னன்

(கலர்) (3)

---

# NEW SCIENCE ACADEMY

**Day Paper Class**

பிரிவு ll நாளை ஆரம்பம்

CHEMISTRY
By
**Mr. சண்**

ஆரம்பம்: 7. 04. 89
FRI 1.00 p.m.
WED, FRI 1.00 p.m.

இன்று ஆரம்பம்

PHYSICS
By
**Mr. மணியம்**
பிரிவு II

மின்னியல்
TUE, THU — 7.30 a.m.

சடப்பொருளியல்
MON, WED, FRI — 7.00 a.m.

இயக்கவியல்
TUE, THU, FRI — 8.30 a.m.

ஒளியியல்
TUE, THU, FRI — 9.30 a.m.

ஆரம்பம்: 6. 04. 89
THU, 7.30 a.m.

ஒலியியல்
MON, WED - 9.00 — 10.30
நடைபெறுகிறது

[சி-2071]

---

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## வேலாயுதபிள்ளை சண்முகதாசன்
(தாசன்)

அன்னை மடியில்: 04-05-1955
இறைவன் அடியில்: 30-03-1987

திதி: 06-04-1989

தலைமகனே எங்கள் தவமகனே
தங்கையர் மூவருக்கும் மூத்தவனே
தந்தை தாய் சகோதரம் யாமிருக்க
விந்தையாய் மாண்டது வேதனை, சோதனை
மரணம் ஒரு நாள் தேடி வரும்
மண்ணிலே என்பார் சான்றோர்கள்
மரணத்தைத் தேடியல்லோ மகனே
உன்னைச் சரணடைத்தோம்
மதி இருந்தும் பாவியானேம்
விதி அங்கே வென்றதய்யா
கெதியற்ற பெற்றோர் நாம்
கதி கலங்கித் தவிக்கின்றோம்.

ஆத்ம சாந்திக்கு ஆண்டவனைப் பிரார்த்திக்கும்:

பெற்றோர்,
திரு. திருமதி வேலாயுதபிள்ளை,
அருமைச் சகோதரிகள்,
மச்சான்மார்,
அன்பு மனைவி, ஆசை மகன்,
உற்றூர், உறவினர்கள், நண்பர்கள்.

மயிலிட்டி வடக்கு,
12 ஆம் வட்டாரம்,
பலாலி,
காங்கேசன்துறை.

(10271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விகாரைக்கு அருகில் நிலக்கண்ணி வெடித்தது

தென்பகுதியில் வெல்லாம் பில என்னும் இடத்தில் நேற்று அதிகாலை நிலக்கண்ணி வெடி ஒன்று வெடித்தது.

அதனால் அப்பகுதி அதிர்ந்தது. வீடுகள் குலுங்கின.

புராதன பௌத்த விகாரை ஒன்றின் அருகில் புதைத்து வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த நிலக்கண்ணியே வெடித்தது.

இச்சம்பவத்துக்கு சில நிமிடங்களுக்கு முன்னர் தான் அரசு பஸ் ஒன்று அந்த இடத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றது. (ஓ-எ)

## வானொலி - லைசென்ஸ்:
## அபராதத் தொகை குறைப்பு

கொழும்பு ஏப்ரல் 6

வானொலி மற்றும் தொலைக் காட்சி லைசென்ஸுகளைப் புதுப்பித்துக் கொள்ளுதல் தாமதமாவதற்கு விதிக்கப் பட்டுவந்த அபராதத்தொகை குறைக்கப்பட்டிருக்கிறது.

புதிய அபராதத்தொகை சென்ற முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வந்துள்ளது.

அபராதம் இன்றி இந்த வருடத்துக்கான லைசென்ஸ் பெறும் காலக்கெடு திங்கட் கிழமையோடு முடிவடைந்தது.

புதிய திட்டத்தின் கீழ் உரிய நேரத்திற்குள் புதுப் பிக்கப்படாத வானொலிப் பெட்டிக்கு அறவிடப்பட்டு வந்த ரூபா 7.50 அபராதம் 3 ரூபாவாகவும், கறுப்பு-வெள்ளை டெலிவிஷன் பெட்டிக்கு விதிக்கப்பட்ட 50ரூபா அபராதம் 15 ரூபாவாகவும் குறைக்கப்பட்டது.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிக்கான புதிய அபராதத் தொகை 25ரூபா.

ஆனால் கடந்த ஆண்டு ஜூலை— டிசம்பர் காலத்தில் விலைக்கு வாங்கிய அல்லது வேறு வழியில் பெற்றுக் கொண்ட கறுப்பு - வெள்ளை டெலிவிஷன் பெட்டிக்கான அபராதத் தொகை 10ரூபா வாகும். அவ்வாறான வண்ண டெலிவிஷன் பெட்டிக்கான அபராதத் தொகை 15 ரூபா வாகும்.

முன்னர் இவ்விரண்டுக்கும் 50ரூபா அபராதத் தொகை யாக இருந்தது.

புதிய அபராதத் தொகை தொடர்பான சுற்றுநிருபம் தபால் திணைக்களத்தில் சகல தபால் நிலைய அதிபர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

## எதிர்காலச் சவால்களை வெல்ல உதவும் விளையாட்டு
### வட்டாரக் கல்வி அதிகாரி பேச்சு

''வகுப்பறைகளில் கற்ற கல்வியிலும் பார்க்க விளையாட்டு மைதானத்தில் கற்ற கல்வி எதிர்காலச்சவால்களை எல்லாம் வெல்ல துணை புரிகின்றது. இவ்வாறான மைதான அனுபவங்களை மாணவர்கள் பெற ஆசிரியர்களும், பெற்றோர்களும், பாடசாலை அதிபர்களும் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்''

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் வித்தியாலய அதிபர் திரு. ஸ்ரீ புஸ்பநாதனின் தலைமையில் நடைபெற்ற காங்கேசன்துறைக் ல்வி வட்டார உடற்பயிற்சிக் கல்வி அதிகாரி திரு அருணகிரிராசா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் வேலும் பேசுகையில் அண்மையில் நியமனம் பெற்ற புதிய ஆசிரியர்கள் மாணவர்களைப் பயிற்றுவிப்பதில் மிக உற்சாகம் காட்டியுள்ளனர் என்றார்.

கல்வி அதிகாரி திரு. சண்முகராசாவும்இதில் உரையாற்றினார். (க-119)


NEW MASTER
**Institute**
B M C Lane - Jaffna
A/L 90
BOTANY
இழையவியல்
**by - V. Kugatharan**
ஆரம்பம் - 08 04 89 Saturday
10.30 - 11.30
[C/2146[


வடக்கு - கிழக்கில்

# பதியப்படாத இறப்புகள் விரைவில் பதியப்படும்
## ஆளுநர் நளின் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இதுவரை பதியப்படாத இறப்புக்களைப் பதிவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப் பட வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் நளின் செனவிரத்ன பணித்துள்ளார்.

இவர் அண்மையில் வடக்கு கிழக்கில் உள்ள மாவட்டங் களுக்கு விஜயம் மேற்கொண் டிருந்தது தெரிந்ததே.

அந்த விஜயத்தின் போது ஆளுநர் அந்தந்த மாவட்டங் களைச் சேர்ந்த அதிகாரிகளைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது அண்மைக்கால அசம்பாவிதங் களில் மரணமானவர்களுடைய இறப்புப்பதிவுகள் தாமதமடைந்து வருவதாக தம்மிடம் புகார் வந்துள்ளதாகவும் இந்தத் தாமதம் உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்று பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும் எல்லா மாவட்டங் களிலும் இறப்புப் பதிவுகளை பார்வையிட்ட ஆளுநர் யாழ்மாவட்டம். தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான இறப்புகள் பதியப்படாதிருப்பதையும் அவதானித்தார்.

சகல மாவட்டங்களிலும் உள்ள உதவி அரசாங்க அதிபர்களை, அந்தந்தப்பகுதி மாவட்டப் பதிவாளர்களின் பிரதிநிதிகளாக நியமித்து விசாரணைகளை மேற்கொண்டு இறப் புப் பதிவுகளை துரிதகதியில் முடிக்கும்படி ஆளுநர் பணிப் புரை விடுத்துள்ளார். [ஒ-9-10]

## டிக்ஸிற்றின் முந்திய பதவிகள்

கொழும்பு, ஏப்ரல். 6

இலங்கையில் இந்தியத் தூதுவராகப் பதவி வகித்த திரு. ஜே. என். டிக்ஸிற் பாகிஸ்தானுக்கு இந்திய தூதுவராகச் செல்கிறார்.

அவர் இதற்கு முன்னர் வகித்த பதவிகள் வருமாறு:

1962 இல் சீன இந்திய எல்லை யுத்தம் நடந்த போது இந்திய வெளியுறவு அமைச்சில் சீனப்பிரிவின் பொறுப் பாளராக திரு. டிக்ஸிற் கடமையாற்றினார்,

1971 இல் பாகிஸ்தானுடன் இந்தியா யுத்தம் நடத்தி பங்களாதேஷ் உருவான போது திரு. டிக்ஸிற் இந்திய வெளியுறவுஅமைச்சில் விசேட வெளிநாட்டுப்பிரிவின் இயக்குநராக பணியாற்றினார்

அடுத்த ஆண்டு பங்களாதேஷில் இந்தியாவின் தூதராக திரு. டிக்ஸிற் கடமையாற்றினார்.

1985 மே மாதம் இலங்கை வருவதற்கு முன்னர் ஆப்கன் தலைநகர் காபூலில் இந்தியத் தூதராகப் திரு. டிக்ஸிற் பணி புரிந்தார். (உ-எ)

## சரணடைவோரை வரவேற்க நிலையங்கள்!

ஜனாதிபதியின் வேண்டுகோளை ஏற்று சரணடையும் தென் இலங்கைத் தீவிரவாதிகளை வரவேற்கவர வேற்புநிலையங்கள் நாடுளங்கும் அமைக்கப்பட்டுவருவதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின இத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்,

துப்பாக்கியினால் பிரச்சினை தீரா.

பரஸ்பரம் பேச்சுக்களை நடத்துவதனமூலமேபிரச்சினைகளைத் தீர்க்க முடியும். ஜனாதிபதி வழங்கிய பொது மன்னிப்பு அறிவிப்பு அவரது விசுவாசமான தூய எண்ணத்தை பிரதிபலிக்கிறது''— என்று சொன்னார்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல பேசுகையில்''— சரணடைய விரும்புவோர் மதத் தலைவர்கள், அரசு அதிபர்கள் மற்றும் பொலிஸ் நிலையங்கள் மூலம் வரவேற்பு நிலையங்களுக்கு வரலாம்'' என்று சொன்னார். (இ)

## தகவல் கொடுப்போருக்கு சன்மானம் வழங்கப்படும்
### இலங்கை அரசு விவரம் அறிவிப்பு

ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகள்பற்றி தகவல் கொடுப்பவருக்கு இலங்கை அரசு வழங்கும் சன்மானம் பற்றிய விவரம் வருமாறு:-

★ ரூபா 30 ஆயிரம்தானியங்கித் துப்பாக்கி மற்றும் இயந்திரத் துப்பாக்கி பற்றிய தகவலுக்கு.

★ 15ஆயிரம்ரூபா—ஷொட்கன் பற்றிய தகவலுக்கு.

★ 10 ஆயிரம் ரூபா — றிப்பிட்டர் ஷொட்கன் மற்றும் 303 ரைபிள்.

★ 5 ஆயிரம் ரூபா — பிஸ்டல், ரிவால்வர் மற்றும் தனி, இரட்டைத் துப்பாக்கிகளுக்கு.

★ ஆயிரம் ரூபா — கிறனேட் மற்றும் ஒருகிலோ நிலக் கண்ணிவெடி மருந்து. [ஓ-எ]

## திருமலையில் கல்வி அமைச்சு அலுவலகம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

வடக்குகிழக்கு கல்வி அமைச்சின் அலுவலகம் கடந்த சனிக்கிழமை திருகோணமலை, உவர் மலையில் திறந்து வைக் கப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாள் திறந்து வைத்தார். [ஒ-9-113]


இரண்டாவது
பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் ம. கதீசன்

வாதரவத்தை விரவாணியில் வசிக்கும் மன்மதராசா இந்திராகாந்தி தம்பதிகளின் தவப்புதல்வன் கதீசன் தமது இரண்டாவது பிறந்தநாளை தமது இல்லத்தில் அதி விமரிசையாகக் கொண்டாடுகின்றார். சதீசனை அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, திருநகர் அப்பம்மா, பெரியப்பா குடும்பத்தினர், சித்தப்பாமார், சித்தி, அத்தை மாமா குடும்பத்தினர், அன்ராபத்மா, அரோக அன்ரி, பள்ளிக்குடாதில்லையம்மா குடும்பத்தினர், பூட்டியாச்சி, விநாயகர்மாமா ஆகியோர் சத்த கன்னிமார் அருளால் பல்கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர். (79)



உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி
COMPUTER DIPLOMA
**Computer Programming and Data Processing in Basic Language**
பயிற்சிக் காலம்: 3 மாதம். ஆரம்பம்: 12. 4. 89
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்)
சேரும்பொழுது செலுத்த வேண்டியது 500/- மாத்திரம்
O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடியநேர செய்முறைப் பயிற்சி குளிரூட்டப்பட்ட அறையில் (I. B. M. COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள். ஆகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பதிவு செய்து கொள்ளவும்.
விண்ணப்ப முடிவு நாள்: 11 - 04 - 89




UNIKCO COMPUTER CENTRE,
No. 5, மின்சார நிலைய வீதி,
2ஆம் ஒழுங்கை,
(உப தபாற் கந்தோர் அருகாமை)
யாழ்ப்பாணம்.
(C/2061)



CEYLINCO TRAVELS LTD.
BACK IN JAFFNA
FOR YOUR SERVICE FROM TODAY (6-4-1989)
AIR TICKETS TO ANY PART OF THE WORLD AT REASONABLE FARES.
Sit comfortably at home and get your
TICKETS, TRAVELLERS CHEQUES,
RECONFIRMATION OF TICKETS AND BOOKING OF SEATS.
(For open tickets)
To Make your travel comfortable please contact:
CEYLINCO TRAVELS LTD.,
THE FINANCE CO. BUILDING,
249, Power House Road, JAFFNA.
Tele: 22089, 23680.

HEAD OFFICE:
CEYLINCO HOUSE
COLOMBO - 1
Tele: 545531, 545532, 545533, 549980.

SOUTH ASIAN TRAVELS LTD.
GENERAL SALES AGENT
FOR
KUWAIT AIRWAYS CORPORATION.
[75]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாவட்ட கூட்டுறவுச் சபை

## யாழ்ப்பாணத்தில் நிறுவ ஏற்பாடு

காங்கேசந்துறை, ஏப்ரல். 6

இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் பணிகளைப் பரவலாக்கி மாவட்டங்கள் தோறும் மாவட்ட கூட்டுறவுச் சபைகளை அமைக்கும் திட்டத்தின்கீழ் யாழ். மாவட்டத்தில் மாவட்ட கூட்டுறவுச் சபை ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ். மாவட்டச் செயலாளர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் இதுகுறித்து யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு அமைப்புகளுக்கு அறிவித்தல் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

எதிர்வரும் 9 ஆம் திகதி யாழ். மணியம்ஸ் கட்டடத்தில் உள்ள கூட்டுறவுச் சபைக் காரியாலயத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையை அமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற உள்ளது.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை அமைக்கப்பட்டதும் தேசிய கூட்டுறவுச் சபையின் மாவட்டக் குழுவால் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளும் இம் மாவட்ட கூட்டுறவுச் சபையிடம் ஒப்படைக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது. [ஓ-68]

# "உடலால் உறுதி பெற்ற மாணவரே உளத்தால் உறுதியான கல்வியைப் பெறமுடியும்"

பலாலி ஏப்ரல் 6

உடலால் உறுதி பெற்ற மாணவரே உளத்தால் உறுதியான கல்வியைப் பெறமுடியும். உடலால் சோர்ந்துள்ள மாணவர்கள் உளத்தால் உறுதியான கல்வி பெறுவது கடினமே! இவற்றை அடிப்படையாகக் கொண்டுதான் இன்று எமது பிள்ளைகளுக்கு மதிய போசனம் வழங்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

அதனை பரீட்சார்த்தமாக இன்று இங்கு நான் ஆரம்பித்து வைப்பதை ஒட்டி மகிழ்ச்சியடைகின்றேன்''

கட்டுவன்புலம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மதிய உணவுக்காக பசுப்பால் வழங்கும் முன்னோடித்திட்டத்தை தொடக்கி வைத்து உரையாற்றிய யாழ். பிரதிக் கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் திரு. க. இராசதுரையின் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பாடசாலைக்கான புதிய மின் ஒளியேற்று வைபவமும் குழாய்நீர் விநியோகமும்நடைபெற்றன.

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும்– நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.சி. சிவமகாராசா புதிய மின் ஒளியை ஏற்றிவைத்துஉரையாற்றினர் [சு-119]

ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை

# வினாத்தாள்கள் தயாரிக்கும்போது

## பாடசாலைகள் அடிக்கடி மூடப்படுவது கவனத்தில் எடுக்கப்படுமாம்

கொழும்பு, ஏப்ரல் 6

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு வினாத்தாள் தயாரிக்கப்படும்போது கடந்த காலங்களில் பாடசாலைகள் அடிக்கடி மூடப்பட்ட விஷயம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

மக்கள் ஐக்கிய முன்னணி எம். பி பந்துல குணவர்த்தன ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சை பற்றி நாடாளுமன்றத்தில் பின்வரும் கேள்வியை எழுப்பினர்.

★ நடைபெற்ற பாடநெறிகளுக்கு அமைய வினாத்தாள் தயாரிக்கப்படுமா?

★ அதற்காக வினாத்தாள் தயாரிக்கும் குழுவிற்கு அமைச்சர் ஆலோசனை வழங்குவாரா?

★ இல்லையென்றால் பரீட்சை ஆகஸ்ட்மாதகம் நடைபெறாது ஒத்திவைக்கப்படுமா?

அமைச்சர் லொக்குபண்டார தமது பதிலில் —

பரீட்சை ஒத்திவைக்கப்படமாட்டாது.

பாடசாலைகள் மூடப்பட்ட காலத்தைக் கருத்தில் கொண்டே வினாத்தாள் தயாரிக்கப்படும்.

மேலதிக வகுப்புக்களை நடத்தும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

தடுப்புக்காவலில் உள்ள மாணவருக்குப் பரீட்சை எடுக்க வசதி செய்துகொடுக்கப்படும்—என்று சொன்னர். [இ-எ]

## தண்ணீர்ப் பிரச்சினை தீர்ந்தது

சாவகச்சேரி, ஏப்ரல். 6

நுணாவில் மேற்கு ¼ அமெரிக்க தமிழ்கலவன் பாடசாலையில் நிலவி வந்த குடிதண்ணீர் தட்டுப்பாடு இப் பாடசாலையின் அதிபர் திரு. இ. மெய்யழகன் எடுத்துக் கொண்டமுயற்சியினால்தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

திருமதி மங்களேஸ்வரி அரசரத்தினம் அவரது தந்தை அமரர் சோமசுந்தரத்தின் நினைவாக ரூபா 8000 செலவில் சட்டிக்கொடுத்த குழாய்க் கிணறு மூலம் இப்பாடசாலையின் குடிதண்ணீர் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டது. (ச – 31)


## தேவை

அச்சுக்கோர்ப்பாளர்கள், பக்கம் கட்டுவோர், பத்திரிகை மடிப்போர் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

★ உதயன் அச்சகம் ★

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.



## பதவி வெற்றிடம்

அமைய அடிப்படையிலான கொதிகலன் இயக்குனர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சம்பளம் மாதாந்தம் ரூபா 2000/- வழங்கப்படும். கொதிகலன் இயக்குனர் தராதரப் பத்திரம் தரம்-3 தகைமையோடு, மணிக்கு 3000 இருத்தல் ஆவியாக்கும் ஆற்றல் உள்ள கொதிகலன் இயக்குவதில் குறைந்தது மூன்று வருட அனுபவம் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம். தகைமயுடையவர்கள் தேவையான ஆவணங்களுடன் 12-04-89 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு பின்வரும் விலாசத்தில் சமுகம் தரவும்.

விலாசம்:

**பனை அபிவிருத்திச் சபை**

இல: 54, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/2069


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திரு. சங்கரப்பிள்ளை சிவசாமி

தோற்றம்: 17-04-1925 மறைவு: 06-03 1989

தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வங்கியா,
இணுவில் கிழக்கு.

[10282]


## கேள்வி விளம்பரம்
### நீர்ப்பாசனத் திணைக்களம்
### முத்து ஐயன் கட்டுப் பிரிவு

பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து 1989-05-04ஆம் திகதி மு. ப. 10. 00 மணி வரை பின்வரும் வேலைகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1) தண்ணிமுறிப்புக் குளத்தின் கலிங்கு திருத்த வேலை.
(2) (15) நீர்ப்பாசன வீதிகள் புனரமைப்பு வேலைகள் (14 வேலைகள்)

மத்தியதர ஒப்பந்த வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்களை கிளிநொச்சிப் பிராந்திய நீர்ப்பாசனப் பிரதிப் பணிப்பாளர், கண்டி வீதி பரந்தனிடமும், சிறிய தர வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்களை நீர்ப்பாசனப் பொறியியலாளர் முத்துஐயன் கட்டுப் பிரிவு, 459, கண்டி வீதி, பரந்தனிடமிருந்தும் 1989-04-03 ஆம் திகதியிலிருந்து 1989-05-02 ஆம் திகதிவரை அலுவலக நாட்களில் காலை 9. 00 மணி தொடக்கம் மாலை 3. 00 மணி வரை ரூபா 250/- மீளளிக்கப்படும் கட்டுப்பணமாகவும், ரூபா 50/- மீளளிக்கப்படாத கட்டுப்பணமாகவும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.


மேலதிக விபரங்களுக்கு முத்து ஐயன் கட்டுப் பிரிவு, நீர்ப்பாசனப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

எந்திரி நா, சோதிராஜா
நீர்ப்பாசனப் பொறியியலாளர்
முத்துஐயன் கட்டுப்பிரிவு

நீர்ப்பாசன அலுவலகம்,
முத்து ஐயன் கட்டுப் பிரிவு,
459, கண்டி வீதி, பரந்தன்.
1989-03-31.

(சி/2148)


## 4வது ஆண்டு நினைவஞ்சலி



உயர்திரு T. A. சபாரட்டிணம் அவர்கள்

தோற்றம்: 19 – 12 19 3 மறைவு: 6 – 4 – 1985

எங்கள் வாழ்வில் என்றும் எங்களை வழி நடாத்தும் தெய்வமே! என்றென்றும் தங்களை இறைஞ்சுகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

நாவலர் ஒழுங்கை,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(10286)


## ஸ்ரீ கணேச அச்சகம்

திருக்கோணமலை.

### பதவி வெற்றிடம்

கீழ்க்காணும் பதவிகளுக்கு வேலையாட்கள் தேவைப்படுகின்றனர். நேரிலோ, தபால்மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

1. கொம்பசிட்டர்கள்
2. பைண்டர்
3. பிளேற்றின் மெஷின் மைண்டர்

இல 5, வித்தியாலய வீதி,
திருக்கோணமலை



A/L 91

THE EXPRESS INSTITUTE KOPAY

A BOON TO STUDENTS

செவ்வாய், வியாழன்

**பொருளியல்**

திரு. லோகசிங்கம்

**கணக்கியல்**

திரு. மரியதாஸ்

[C-2112]



## லொறி 'பொடி' அடித்தல்

எமது சங்கத்தின் புதிய இசூஸ் லொறிக்கு 'பொடி' அடிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விபரங்களுக்கும், விண்ணப்பப்படிவங்களுக்கும் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும். விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் 10-4-89 அன்று அல்லது முன்னர் கிடைக்கக்கூடியதாக பொதுமுகாமையாளர், பூநகரி ப. நோ. கூ. சங்கம், பூநகரி என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். தபால்மூலம் தொடர்பு கொள்ள விரும்புவோர் விலாசமிடப்பட்ட, முத்திரையிடப்பட்ட கடித உறையுடன் மீளளிக்கப்படாத ரூபா 5/- தபாற் கட்டளை செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்.
பூநகரி ப. நோ. கூ. சங்கம்,
பூநகரி.

[ 2072]


## 31 ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திரு. இளையதம்பி மருதநாயகம் (பாபு)
(Driving Instructor – C. T. B.)

தோற்றம்: 1930-08-24 மறைவு: 1989-03-07

அமரராகிய எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் பல வழிகளில் உதவிய உற்றார், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் 1989-04-06 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கிழுவானை ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு.
கோப்பாய்.

மனைவி, பிள்ளைகள்
[10284]

## ஓராண்டு நினைவு அஞ்சலி



மண்ணில்: 1915 - 06 - 21

ௐ

விண்ணில்: 1988 - 03 - 19

உயர்திரு
கதிரவேலு கந்தையா
[பிரபல வர்த்தகர்]

திதி: 06 - 04 - 1989

ஆண்டொன்று ஆகுதய்யா
அடிமனமோ நோகுதய்யா
நிழல் மரமாய் நீர் இருந்தால்
நின்று இருப்போம் உம் அடியில்
நிழல் மரம் நீர் சாய்ந்ததனுல்
நிழல் தேடி ஒடுகின்றோம் ......
ஈண்டு உம்மை நினைந்தே
இவ்வுலகில் வாழ்கின்றோம்
உழைப்பால் உயர்ந்த உத்தமரின்

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சகோதரர்கள், மைத்துனர்கள்.

"சரவண பவனம்"
4 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

[65]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**
மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்தல் இன்று.

**பொருள்:**
மனையாளுக்குப் பயந்து அவள் சொன்னபடி நடக்கிறவன் இப்பிறப்பில் எந்தக்காரியத்திலும் வெற்றி பெற முடியாது; நல்ல அடுத்த பிறப்பைப் பற்றி நினைக்கவும் அருகன் அல்லன்.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
06 - 04 - 1989 த. பெ. இல: 23


## ஏன் இந்தக் கோழைத்தனம்?

தென்னிலங்கையில் சமாதானத்தைக் கொண்டுவர அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் கூட்டாக மேற்கொள்ள இருந்த முயற்சி கைகூடவில்லை.

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச அறிவித்த சமாதானத் திட்டத்தை ஜே. வி. பி.யினர் என அழைக்கப்படும் மக்கள் விடுதலை முன்னணியினர் ஏற்றுக்கொள்ளவில்லை; நிராகரித்துவிட்டனர்.

தங்களின் முதலாவது கிளர்ச்சி நடவடிக்கையின் பதினெட்டாவது நிறைவு தினம் நேற்று என்பதால் அதனைப் பெரிதாகக் ''கொண்டாட'' வேண்டும் என்று ஜே. வி. பியினர் கருதினர். அந்தக் கொண்டாட்டம், அரச சேவைகளை, மக்களின் நாளாந்த இயல்பான வாழ்க்கையை, முடங்கச் செய்யும் ஹர்த்தாலாக அமைய வேண்டும் என்று அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக நேற்று முதல் ஒரு வாரத்துக்கு ஹர்த்தால் அனுஷ்டிக்க ஜே. வி. பியினர் அழைப்பு விடுத்திருந்தனர்.

ஹர்த்தால் அதற்குரிய அமைதித் தொனியுடன் நடைபெற அனுமதித்து, அரசசேவைகள், மக்கள் வாழ்க்கை என்பன பாதிக்கப்பட்டு விட்டால், அரசாங்கத்தின் அதிகாரச் சிறப்புக்கு அது களங்கமாகிவிடும். அதன் ஆட்சி வலிமை தோல்வி கண்டதாகக் கருதப்படும் என்று அரச கட்டிலில் உள்ளவர்கள் நினைக்கிறார்கள். தாங்கள் பலவீனமானவர்கள் என மதிப்பிடப் படுவதற்குப் பதிலாக, வல்லவனுக்கு வல்லவன் என்று காட்டவேண்டும் என்பதையே எந்த அதிகார அரசியல் வாதியும் விரும்புவார்.

அந்த வகையில் ஹர்த்தாலை முறியடிக்க அரசாங்கம் தனது படை பலத்தைப் பிரயோகிக்க முனைந்துள்ளது. அதன் விளைவு இருசாராரும் முட்டி மோதுதல் ஆகி, ஈற்றில் வன்செயல்களுக்குத் தூபமிட்டு அவற்றைப் பெருக்கி, மக்களுக்கும் நாட்டுக்கும் உயிர்ச்சேதமும், உடைமைச் சேதமும் உண்டுபண்ணுவதிலேயே முடியும். அரசாங்கத்துக்கும் தீவிரவாதிகளுக்குமான பலப்போட்டியில் சிக்கிச் சீரழிவது பொது மக்களும், நாடுமே.

இந்த அழிவில் வன்செயலாளர்களைப் போல, அரசாங்கத்துக்கும் அரைவாசிப் பங்கும், பொறுப்பும் உண்டு என்பதை அரசு உணருதல் வேண்டும்.

இந்தக் கட்டத்தில் அரசாங்கம் வன்செயல்களைப் பெருக்குவதற்குப் புதிதாக நடத்தி வரும் ஒரு மிலேச்சத் தனமான திட்டம் அல்லது ஆலோசனை குறித்து இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

ஜே. வி. பியின் ஹர்த்தாலை முறியடிக்க, தென் பகுதி வர்த்தகர்களுக்கும், தனியார் பஸ் ஊழியர்களுக்கும் துப்பாக்கிகள் தருவதாக இராணுவம் உறுதி வழங்கி இருப்பதே அந்தத்திட்டமாகும்!

இராணுவ பிரிகேடியர் ஒருவர் தலைமையில் நடந்த வர்த்தகர் - பஸ் ஊழியர் பாதுகாப்புப் பற்றிய மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட தகவல்கள் நிலைமையை மோசமாக்குமே அன்றி அமைதியைக் கொண்டு வராது என்பதை அரசு அதிகாரிகள் மறந்து விட்டனர்.

வர்த்தகர்கள், பஸ் ஊழியர்களை சட்டமறுப்புச்செயல்களில் ஈடுபடுமாறு நெருக்குதல் செய்யும் தீவிரவாதிகளைத் தாக்குவதற்கு, அவர்களுக்குத் துப்பாக்கிகள் வழங்கப்படும். அசிட் குண்டுகள் கொண்டு தாக்கும்படி ஆலோசனை கூறப்பட்டுள்ளது. குறைந்த பட்சம் ஒரு கத்தியாவது வைத்திருக்கும்படி வர்த்தகர்கள், பஸ் ஊழியர்கள் கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

இதில் விபரீதம் என்னவெனில் முன் கூறிய யாவும் சட்ட விரோதமானவை. சாதாரண குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டனைக்கு உரியவை. ஆனால் அந்தக் குற்றங்களைச் செய்யுமாறு அரசாங்கமே தூண்டுகிறது என்றால் ......?

நாட்டு நிலைமை எங்கே போய் முடியும்? சட்டம், ஒழுங்கு என்பன பேணப்படுவது எங்ஙனம்? இந்த வர்த்தகர்களும், பஸ் ஊழியர்களும் இன்னும் சில மாதங்களில் தீவிரவாதிகளாக, வன்செயலாளராக மாறமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

அநீதிகளுக்கு எதிராக, அடக்கு முறைகளுக்கு எதிராக மக்கள் தமது சொந்த விருப்பத்தின் பேரில், உணர்வு பூர்வமாக விரும்பி, ஆயுதம் ஏந்திப் போராடுவது வேறு.

அரசாங்கமே மக்களை வன்செயலாளர்களாக்கி அவர்களைத் தீவிரவாதிகளுடன் மோத வைப்பது வேறு. அது நாட்டின் சீரழிவுக்கே வழிகோலும்; மக்களின் அழிவிலேயே முடியும். ஒரு பக்கத்தில் பார்த்தால், சட்டங்களையும், ஆயுதங்களையும் தாராளமாக வைத்திருந்தும், மக்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்க முடியாத நிலையில், அரசு புரியும் கோழைத்தனம் என்றே இதனைச் சொல்ல வேண்டும்!

பலாத்காரத்தை அன்பாலும், ஹிம்சையை அஹிம்சையாலும் வெல்லும் சீரிய மார்க்கத்தைக் கடைப்பிடிப்பதற்குப் பதிலாக, வன்செயல்களை வன்செயல்களால் (அதுவும் மக்களை அதில் ஈடுபடுத்தி) தடுக்க நினைப்பது வெற்றி தராது; தோல்வியிலேயே முடியும். நாடும் மக்களும் அழிந்து போக வழி ஏற்படும்.

### இந்திய எதிர்ப்பு உணர்வு பெருகி வரும்

# நேபாளத்தில் மாணவர் ஆர்ப்பாட்டம்;

# கல்வி நிலையங்கள் மூடப்பட்டன!

காத்மண்டு, ஏப்ரல் 5

நேபாளத்தில் இந்திய எதிர்ப்புணர்ச்சி பரவி வருவதாக அறிவிக்கப்பட்டது.

மாணவர்கள் இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதைத்தொடர்ந்து பாடசாலைகள், பல்கலைக்கழகங்களை இரண்டு மாதங்களுக்கு மூடிவிடுவது என்று காத்மண்டு அரசு தீர்மானித்தது.

நேபாள - இந்திய வர்த்தக உடன்பாடு கடந்த மாதம் 23 ஆம் திகதியுடன் காலாவதியாகிவிட்டது.

அதைப்புதுப்பிக்க இந்திய அரசு மறுத்து விட்டது. நேபாள அரசோ ஒருதலைப் பட்சமான அந்த வர்த்தக உடன்பாடு சமத்துவ அடிப்படையில் புதுப்பிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

உடன்பாடு காலாவதியானதைத் தொடர்ந்து நேபாளத்தில் உணவுத் தட்டுப்பாடும் பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகிறது. நேபாளத்தின் குறுகிய தூர போக்குவரத்துச் சேவைகள் 50 சதவீதத்தினால் குறைக்கப்பட்டன. நீண்ட தூர போக்குவரத்து 40 சதவீதத்தினால் குறைக்கப்பட்டது.

சிக்கன நடவடிக்கையாக பெற்றோல் விநியோக நிலையங்கள் மூடப்பட்டுவிட்டன.

இதேவேளை, நேபாளத்துக்கு உணவுப் பொருள்களை விநியோகிப்பதில் கோட்டா முறையை இந்தியா கொண்டு வந்துள்ளது.

சீனி, பால்மா, தேங்காய் எண்ணெய் ஆகியவை இவற்றில் அடங்குகின்றன.

இந்தியாவின் ஏகாதிபத்தியக் கொள்கையைக் கண்டித்து நேபாள மாணவர்கள் தினமும் பேரணிகளை நடத்தி வருகின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்த ஆர்ப்பாட்டங்களை தடை செய்யப்பட்ட இடதுசாரிக்கட்சிகளின் ஆதரவைப் பெற்ற மாணவர் முன்னணி நடத்துகிறது.

ஆர்ப்பாட்டஞ் செய்தவர்களைப் பொலீஸார் கைது செய்தனர். (எ)

## இஸ்ரவேல் மேற்பார்வையில் அரபு பிரதேசத்தில் தேர்தலா?

### எகிப்து நிராகரிப்பு

இஸ்ரவேலின் மேற்பார்வையில் ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசத்தில் தேர்தல் நடத்தப்படும் திட்டத்தை எகிப்து ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் நிராகரித்தார்.

இத் திட்டத்தை இஸ்ரவேல் சமர்ப்பித்து இருந்தது.

காஸா மற்றும் மேற்குப் பிரதேசத்தில் பலஸ்தீனியர் கலந்து கொள்ளும் தேர்தலை தனது மேற்பார்வையில் நடத்த வேண்டும் என்று இஸ்ரவேல் தனது புதிய யோசனையில் தெரிவித்திருந்தது. (எ)

## "நான் கலைஞர் பக்கமே" இராம வீரப்பன்கூறுகின்றார்

சென்னை, ஏப்ரல் 5

கலைஞரா? ஜெயலலிதாவா? என்று கேட்டால் நான் கலைஞர் பக்கம் தான் இருப்பேன்.

அ. தி. மு. க. எம்.ஜி.ஆர். கட்சித்தலைவர் திரு. இராம வீரப்பன் முன்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சரான திரு. வீரப்பன் அண்மையில் எம். ஜி. ஆர். நினைவு அஞ்சலிக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார். அதன் பின்னர் அவர் செய்தியாளர் மத்தியில் பேசினார். அப்போது அவர் சொன்னதாவது:

தி. மு. க.வோடு கூட்டு இல்லை ஆனால் அரசியல் சூழ்நிலை ஏற்பட்டால் தி. மு. க. வுடன் உறவு வைத்துக் கொள்வது பாபமான காரியமல்ல.

ஆனால் எம். ஜி. ஆரின் புகழை யார் அழிக்க முற்பட்டாலும் அதை எதிர்த்து நிற்போம்.

கடைசிக் காலத்தில் யாரைப் பார்க்கக் கூடாது, அவரோடு பேசக் கூடாது என்றாரோ அவரை ஜெயலலிதா இன்று தலைவர் என்கிறார்.

எம். ஜி. ஆரின் உண்மையான தொண்டர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன்.

''நீங்கள் அ. தி. மு. க. பெயரில் இயங்க வேண்டுமானால் ஜெயலலிதா தலைமையை நீக்குங்கள் ஜெயலலிதா தலைமை தான் வேண்டும் என்றால் அ.தி மு.க. பெயரை நீங்கள் பயன்படுத்தாதீர்கள்.

இவ்வாறு திரு. வீரப்பன் தெரிவித்தார். (எ)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இந்திய அழகி பமேலா காயம்

ஹொங்கொங், ஏப்ரல் 5

இந்திய அழகி பமேலா போர்டஸ் மோட்டார் சைக்கிள் விபத்து ஒன்றில் அகப்பட்டு காயமடைந்தார்.

அவர் தற்சமயம் ஹொங்கொங் மருத்துவ மனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

லண்டனில் இவரின் பாலியல் உறவு - உளவு மோசடி அம்பலமானதைத் தொடர்ந்து, இவர் இந்தோனேஷியாவின் பாலித்தீவுக்குச் சென்று தலைமறைவாக இருந்து வந்தார்.

அச்சமயமே இவர் பயணஞ் செய்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானது. (எ)

## கியூபாவில் சோவியத் தலைவர் நாடாளுமன்றத்தில் சிறப்புரை

ஹவானா, ஏப்ரல். 5

அயல் நாடுகளில் தீவிர வாதச் செயல்களை ஊக்குவிக்க வேண்டாம் என்று சோவியத் யூனியன் கியூபாவையும் நிக்கரகுவாவையும் கேட்கவிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இதன் மத்தியில் - சோவியத் ஜனாதிபதி மிக்கெல் கோர்பச்சேப், நேற்று கியூபன் நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தினார்.

கியூபாவிற்கு வழங்கி வந்த ஆதரவைக் குறைக்கவில்லை என்று திரு. கோர்பச்சேவ் சொன்னார். (எ)

## பிரதமர் ஷாமிர் வாஷிங்டனில்

வாஷிங்டன், ஏப்ரல் 5

இஸ்ரவேலியப் பிரதமர் ஷாமிர் வாஷிங்டன் சென்றிருக்கின்றார்.

மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுடன் முக்கிய பேச்சுக்களை இவர் நடத்த இருக்கிறார். (எ)

## எகிப்து ஜனாதிபதி அமெரிக்க விஜயம்

எகிப்துஜனாதிபதிஹோஸ்னி முபாரக் நேற்று வாஷிங்டன் போய்ச் சேர்ந்தார்.

மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காணுவது தொடர்பான பேச்சுக்களை தனது விஜயத்தின் போது அதிபர் ஜோர்ஜ் புஷ் உடன் நடத்த அவர் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ)

## அஸாமில் போடோ இன போராட்டம்

கௌஹாத்தி, எப்ரல் 5

அஸாம் மாநிலத்தில் தனி நாடு கோரி போராட்டம் நடத்தி வரும் போடோ இன போராளிகள் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

துப்பாக்கிச் சண்டை ஒன்றின்போது பொலீஸார் போடோ இன போராளி மாணவர் இயக்கத்தைச் சேர்ந்த இருவரைச் சுட்டுக்கொன்றனர். (எ)

## கம்பூச்சிய பிரச்சினை

பிகிங், ஏப்ரல் 5

கம்பூச்சிய விடுதலை இயக்கத் தலைவர் நொரடொம் சிஹனுக் இளவரசர் கம்பூச்சிய அரசுத்தலைவர் ஹுன் சென்னை அடுத்த மாதம் இந்தோனேஷியத் தலைநகர் ஜாகர்த்தாவில் சந்தித்துப் பேச விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

கம்பூச்சிய யுத்தத்துக்குத் தீர்வு காணும் நோக்குடன் புதிய சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்படும் என்று சிஹனுக் இளவரசர் தெரிவித்தார். (எ)

### கிறிஸ்தவர்கள் அல்லாத தமிழ் மக்கள்

# திருமறையைக் கற்றறிய தேம்பாவணியே சிறந்தது

### யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை உரை

குருநகர், ஏப்ரல். 6

கிறிஸ்தவர்கள் அல்லாத எமது தமிழ் மக்கள் வேதாகம- திருமறைச் செய்திகளைக் கற்றறிய வேண்டுமென்றால் 'தேம்பாவணி' காப்பியத்தைவிடச் சிறந்த நூல் வேறில்லை.

தேம்பாவணி விழாவுக்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்திய யாழ் ஆயர் மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் - திருமறைக் கலா மன்றம் தேம்பாவணிக் காப்பியத்துக்கு எடுத்த ஒருநாள் பெருவிழா யாழ் - மறைக் கல்வி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

காலை 8-45 மணிக்கு கல்வியங்காடு பிச்சையப்பா குழுவினரின் மங்கள இசைப் பவனியுடன் விழா ஆரம்பமானது.

மங்கள விளக்கை யாழ்- ஆயர் ஏற்றிவைத்தார். இறை வணக்கத்தை அடுத்துவரவேற்புரையை திரு. மூ. புஷ்பராஜன் நிகழ்த்தினார்.

'தேம்பாவணி' பாயிரம், அவையடக்கம் நூல் வந்த வழி ஆகிய படலங்களை திரு. அருள் பிலிப்பையா இசையுடன்பாட திரு. எம். ஜே. தாஸ் குழுவினர் இசையமைத்தனர்.

தொடர்ந்து பேசுகையில் ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தெரிவித்ததாவது!

'தேம்பாவணி எமது தமிழ் காப்பியங்களில் ஒன்று என்பதை எல்லோரும் அறிவர். இந்தக் காப்பியம் ஒரு தமிழரால் அல்ல; தமிழ் மொழியைத் துறைபோகக் கற்றறிந்த ஒரு பிறநாட்டவரால் தமிழில் பாடப்பட்டதாகும்.

இத்தாலி நாட்டைச்சேர்ந்த காண்டான்யுசியல் யோசெப் பெஸ்கி என்னும் கிறிஸ்தவப் பாதிரியார் தமிழ் நாட்டுக்கு மதசேவையாற்ற வந்தபோது தமிழ்மொழி மீது ஏற்பட்ட காதலால் கற்றுப் படைத்த காப்பியம் இது.

பெஸ்கி அடிகளார் தமிழ் கற்றபின் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் போன்று கிறிஸ்தவமதத்தில் எழுந்த காப்பியம் தமிழில் இல்லாதது கண்டு மனம் வெதும்பினார்.

அதன் பயனாக எழுந்தது தான் தேம்பாவணி என்னும் காப்பியம்.

வேதாகம - திருமறைக் களஞ்சியங்களில் கிடந்த செய்திகளை எல்லாம் தேம்பாவணி காவியத்தூடாக சொல்லப்படுவதால் அந்தக் கால கிறிஸ்தவர்கள் தமிழில் கிடைக்காத திருமறை விடயங்களை இந் நூல் துணை கொண்டு அறிந்திருந்தார்கள்.

இந்தக் காலத்தில் செய்யுள் நூல்களைப் படிப்பது அரிது. அதனால் தேம்பாவணி காவியத்தின் சிறப்பையும், செழுமையையும் கிறிஸ்தவ தமிழர்கள் அறியாதவர்களாக இருந்து வருவது கவலை தருவதாகும்.

இப்படி அவர் கூறினார்.

மற்றும் விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராஜா கலாநிதி நா. சுப்பிரமணியஐயர், பேராசிரியர் அ. சண்முகதாஸ், தேம்பாவணி சிறப் [illegible] (யாழ் ஜெயம்) ஆகியோரும் [illegible]

செல்வி மதி சேவியர் நெறியாள்கையில் தேம்பாவணி காப்பியக் காட்சி 'திருமணப்'படலம் நாட்டிய நாடகம் இடம் பெற்றது.

யாழ்- திருமறைக்கலா மன்ற இசையமைப்பாளர் திரு. எம். ஜே. தாஸின் இருபது வருட சேவையைப் பாராட்டி இசைத்தென்றல் பட்டம் வழங்கப்பட்டு பொன்னாடை போர்த்தப் பட்டது.

கலை நிகழ்ச்சியின் இறுதி அம்சமான முருங்கன் ஆசிரியர் குழந்தை குழுவினரின் வீரனும் தீரனும் நாட்டுக் கூத்தும் இடம் பெற்றது.

திரு, பிரான்சிஸ் ஜெனம் நன்றி தெரிவித்தார். (இ- 51)

## மானிப்பாயில் விஞ்ஞானக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 6

யாழ். விஞ்ஞானக் கழகம் நடத்தும் விஞ்ஞானக் கலந்துரையாடல் ஒன்று நாளை 7-ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும். ஆர்வம் உள்ளவர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றலாம் என அறிவிக்கப்படுகிறது.

கலந்துரையாடலின் முடிவில் போஷாக்கின்மை, அணுசக்தி அபாயம் போன்றவற்றை விளக்கும் வீடியோப் படம் காண்பிக்கப்படும். (க)

## யாழ். இந்துக் கல்லூரியில் சிவஞானத் தமிழ் மாநாடு

### நாளை முதல் நான்கு நாட்களுக்கு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சிவஞான வைரவர் சுவாமி திருக்குட முழுக்குப் பெருவிழாவை முன்னிட்டு கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் நடத்தும் சிவஞானத் தமிழ் மாநாடு 7,8,9,10 ஆம் திகதிகளில் யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

நாளை 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகும் சொல் அரங்கத்தை சட்டத்தரணி திரு. டபிள்யூ எஸ். செந்தில்நாதன் மங்கள விளக்கேற்றித் தொடக்கி வைப்பார்.

இவ்வரங்கத்தில் திருமதி வசந்தா வைத்தியநாதன் திரு. சிவ. மகாலிங்கம் ஆகியோர் கலந்து உரையாற்றுவார்கள்.

8 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள இலக்கிய ஆணைக்குழு திரு. இ. ஜெயராஜ் தலைமையில் நடைபெறும்.

செயற்கரிய செய்கையில் பெரிதும் முன் நிற்பவர் கண்ணப்பர், திருநீலகண்டர் சிறுத்தொண்டர், மெய்ப்பொருள் நாயனார்.

இவ்வாணைக்குழுவின் முன் புலவர் ஈழத்துச்சிவானந்தன், திரு. சோ. பத்மநாதன், கலாநிதி நா. சுப்பிரமணியம், பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் வாதிடுவார்கள்.

கவிதையரங்கு 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திரு. நம. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறும்.

கவிஞர் இ. முருகையன் தலைமையில் நடைபெறும் கவிதை அரங்கில் திரு. சோ. பத்மநாதன், திரு. கல்வயல் வே. குமாரசாமி, திரு. காரை. செ. சுந்தரம்பிள்ளை, திரு. ச. வே. பஞ்சாட்சரம், திரு. சு. வில்வரத்தினம், திரு. க. சனசிங்கம் ஆகியோர் பங்குபற்றுவார்கள்.

10 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு திரு. டபிள்யூ. எஸ். செந்தில்நாதன் தலைமையில் இசை விருந்து ஆரம்பமாகும்.

திரு. பொன். சுந்தரலிங்கத்தின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும். [ச]

## இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 6

யாழ்ப்பாணம் நல்லூர் பண்டாரக்குளம் பிள்ளையார் கோயில் கொடியேற்றம்இன்று வியாழக்கிழமை நடைபெறுகின்றது.

தேர்த்திருவிழா புதுவருடத் தினம் காலை 9மணிக்கும் தீர்த்தத்திருவிழா மறுநாள் சனிக்கிழமை காலை 10 மணிக்கும் நடைபெறவுள்ளன. [ச]

### கலட்டி கற்பகவிநாயகர்

வண்ணார்பண்ணை கலட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மகோற்சவம் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. கொடியேற்றம் பகல் 11மணிக்கு நடைபெறும்.

இரதோற்சவம் புதுவருடத் தினத்தன்றும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

### புங்குடுதீவு கண்ணகை அம்மன்

புங்குடுதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் கோயில் கொடியேற்றம் இன்று வியாழக்கிழமை காலை 10. 30 மணிக்கு நடைபெறும்.

தேர்த்திருவிழா 19ஆம் திகதி புதன் காலை 8. 30 மணிக்கும் தீர்த்தோற்சவம் மறுநாள் வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளன. ச)

★

யாழ்ப்பாணம் - நல்லூர் வடக்கு அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. (க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
✶ பட்டுப் பிடவைகள்
✶ பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்

மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

# உதயன்

06 - 04 - 1989 வியாழக்கிழமை

சேட்டிங் சூட்டிங்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்த இடம்

மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை : யாழ்ப்பாணம்.

## பஸ் பயணிகளிடம் நடுக்காட்டில் கொள்ளை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6
மன்னாரில் இருந்து சங்குப்பிட்டி நோக்கி வந்த பஸ் ஒன்று கடந்த செவ்வாயன்று கொள்ளையிடப்பட்டதாகத் தெரியவருகிறது.

மூன்றும் கட்டைக்கும் பாலியாற்றுக்கும் இடைப்பட்ட பகுதியில் வைத்து ஆயுதம் தாங்கிய சிலரால் பஸ் மறிக்கப்பட்டது. பின்னர் காட்டுப் பகுதியை நோக்கிக் கொண்டு செல்லப்பட்டது.

காட்டுக்குள் வைத்து நடத்துனரிடமும் பயணிகளிடமும் பணம், நகை என்பன கொள்ளையிடப்பட்டன.

இதேவேளையில் கொள்ளையரை அடையாளம் கண்டு கொண்ட பயணி ஒருவர் பஸ்ஸை விட்டு இறக்கி காட்டிற்குள் அழைத்துச் செல்லப் பட்டபின் பஸ் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டதாம். (ஒ-9)

## பருத்தித்துறைப் பகுதியில் நேற்றுத் தீவிர தேடுதல்

வல்வெட்டித்துறை, ஏப். 6
பருத்தித்துறைப் பகுதி நேற்றுஅதிகாலை சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல்மேற்கொள்ளப்பட்டது. நண்பகல்வரை தேடுதல் தொடர்ந்தது.

கடைகள் மூடப்பட்டிருந்தன. எனினும் பருத்தித்துறை டிப்போ பஸ்கள் போக்குவரத்தில் ஈடுபட்டன.

வீடுகளில் இருந்தவர்கள் பழைய பஸ் நிலையத்திற்குக் கூட்டிச் செல்லப்பட்டனர். அவர்களில் சிலர் புலோலி முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். இவர்கள் விசாரணையின்பின்விடுவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. [ஒ-160]

## இலங்கை வரைபடத்தில் வெலிஓயா என்ற சொல் இல்லை

### அரசு வலிந்து புகுத்துகிறது என்கிறார் அமிர்

கொழும்பு ஏப்ரல் 6
இலங்கை வரைபடத்தில் வெலி ஓயா என்ற சொல்லே கிடையாது. அந்த இடத்திற்கு மணல் ஆறு என்றே பெயர். அரசாங்கம் அந்த இடத்துக்குப் புதிய பெயரைக் கொடுத்து பிரச்சினையை வளர்த்து வருகின்றது.

— நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் பேசிய தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பி. திரு அ. அமிர்தலிங்கம் இப்படிச் சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது;

சிங்களக் குடியேற்றம்பற்றி கடந்தகால அரசுகள் கொடுத்த வாக்குறுதிகள் மீறப்பட்டதே தமிழரின் உரிமைப் போராட்டம் தீவிரமடைய வழி வகுத்தது.

சிங்களக் குடியேற்றத்தால் தமிழர்கள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள்.

வெலி – ஓயா பிரதேசம் அநுராதபுர அரச அதிபரின் நிர்வாகத்தின் கீழ் தற்சமயம் உள்ளது. இதனால் வடக்கு-கிழக்கு மாகாண சபை இப்பிரதேசத்தை பொறுப்பேற்று நிர்வகிக்க முடியாதிருக்கிறது.

— இப்படி திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார். (உ-எ)

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கு புதியஅணுகுமுறை தேவை

### ரெலோ இயக்கம் வற்புறுத்து

கொழும்பு ஏப்ரல் 6
இலங்கைத் தமிழர் பிரச்சினையில் புதிய அணுகு முறையைக் கையாள வேண்டும் என்று ரெலோ இயக்கம் இந்தியாவைக் கேட்டிருக்கிறது.

அண்மையில் புதுடில்லியில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் கே.சி. பந்த், வெளியுறவு இணை அமைச்சர் கே. நட்வர் சிங் ஆகியோரை ரெலோ தூதுக்குழு சந்தித்துப் பேசியது.

அச்சமயம் இக் கோரிக்கையை வலியுறுத்திச் சொன்னதாக கொழும்பு திரும்பிய ரெலோ இயக்க பிரமுகர்களான சட்டத்தரணி ஸ்ரீகாந்தா, திரு. சிவாஜிலிங்கம் ஆகியோர் தெரிவித்தனர். [உ-எ]

## 'நியூஸ்வீக்'கைத்தடைசெய்ய கோருகிறார் முஸ்லிம் எம். பி.

கொழும்பு, ஏப்ரல் 6
அமெரிக்க சஞ்சிகை 'நியூஸ்வீக்'கின் ஏப்ரல் 3 ஆம் திகதி இதழைத் தடை செய்யும்படி இலங்கை அரசுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கியதேசியக் கட்சி எம். பி. ஜனாப். எம். எச். எம். அஸ்வர் இந்தக்கோரிக்கையை விடுத்திருக்கிறார்.

குறிப்பிட்ட சஞ்சிகையில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடையது என்று கூறும் படம் ஒன்று பிரசுரிக்கப்பட்டிருக்கிறது என்று ஜனாப் அஸ்வர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். [ஒ-எ]

யாழ். இந்துக் கல்லூரி சிவஞானவைரவர் கோயிற் கட்டிட நிதிக்கான

அதிர்ஷ்ட லாபச் சீட்டு

ரூபா5/-க்கான சீட்டிழுப்பு 07-04-89 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் கல்லூரி முன்றலில் நடைபெறும்.

ரூபா 10/-க்கான சீட்டிழுப்பு 24-05-89 புதன் கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் நடைபெறும்.

ரூபா 5/- சீட்டுக்களின் அடிக்கட்டைகளை உடனடியாக அலுவலகத்திற் கையளிக்கவும்.

யா. இ. க.
பழைய மாணவர் சங்கம் [சி/2076]

சு. டிவகலாலா
செயலாளர்

## இலங்கை - இந்திய உறவுக்கு உயிர் கொடுத்தவராம் டிக்ஸிற்

### தொண்டமான் கூறுகிறார்

கொழும்பு, ஏப்ரல், 6
சீர்குலைந்து வந்த இந்திய-இலங்கை உறவுக்கு உயிர் கொடுத்தவர் திரு. ஜே. என் டிக்ஸிற்.

— இப்படிச் சொன்னார் அமைச்சர் தொண்டமான்.

கொழும்பு ஹில்டன்ஹோட்டலில் திரு. டிக்ஸிற்றுக்கு அளித்த பிரியாவிடை வைபவத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

திரு. டிக்ஸிற் இலங்கையில் ஆற்றியபணி மறக்க முடியாதது; முக்கியமானதுங்கூட.

இரு நாடுகளின் உறவுகளுக்கும் உறுதியாக உழைத்தவர்.

வடக்கு – கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு மட்டும் அவர் தீர்வுகாண உதவவில்லை; மலையகத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண அவர் உதவினார்

— இப்படி அமைச்சர் தொண்டமான் சொன்னார்.

திரு. டிக்ஸிற் பேசுகையில் சொன்னதாவது;

பலநாடுகளில் பணிபுரிந்துள்ளேன். இலங்கையில் ஆற்றிய பணி மறக்கமுடியாததாகும்.

பல இன மக்கள் வாழும் இலங்கை பிளவுபட இருந்த சமயத்தில் பெரும்பான்மையினரும் திருப்தியடையக் கூடிய வகையில் நாட்டின் ஒற்றையாட்சித் திட்டத்தின் கீழ் தீர்வுகாணக்கூடியதாக இருந்தது.

வடக்கு – கிழக்கு தமிழரின் பிரச்சினைகளுக்கு உடன்பாட்டின் மூலம் சட்டபூர்வமான தீர்வு காணப்பட்டுள்ளது. — இப்படி டிக்ஸிற் சொன்னார். [உ-எ]

## இன்றைய கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6
சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் சென்பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையிலான கிரிக்கெட் போட்டி இன்று 6 ஆம் திகதி சென்ஜோன்ஸ்கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (இ-6)

## நகரில் சில பகுதிகள் தொடர்ந்து இருளில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6
யாழ்ப்பாணத்தின் சில பகுதிகள் நேற்று தொடர்ந்து இரண்டாவது நாளாக இருளில் மூழ்கிக் கிடந்தன.

நல்லூர், அரியாலை, புங்கன்குளம், பாஷையூர், கச்சேரி பகுதிகள் தொடர்ந்து இருளில் மூழ்கிக் கிடந்தன.

இப் பகுதிகளுக்கான மின் விநியோகம் நேற்று முன்தினம் இரவு 10.40 மணிக்கு தடைப்பட்டது.

பலாலி வீதியில் யாழ் பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் உள்ள நிலத்துக்கு அடியிலான மின்விநியோகக் கேபிள் ஒன்றில் ஏற்பட்ட பழுதே மின்தடைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பழுதைத் திருத்துவதில் நேற்று இரவு வரை இலங்கை மின்சாரசபை பணியாளர்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். எனினும் நேற்று அதனைத் திருத்தி முடிக்க முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## தெற்கு பல்கலைக்கழகங்கள் மே மாதம் ஆரம்பமாகும்

கொழும்பு, ஏப்ரல் 6
தென்பகுதியில் உள்ள சகல பல்கலைக்கழகங்களும் அடுத்த மாதம் முதல் வாரம் மீண்டும் திறக்கப்படும் என்று உயர் கல்வி, தொழில் நுட்ப, விஞ்ஞானத் துறை அமைச்சர் ஜனாப். சாகுல் ஹமீது அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உயர் கல்வி அமைச்சுக்கான குழுநிலை விவாதத்தில் பேசிய அமைச்சர் பல்கலைக்கழக மாணவரைக் கைது செய்ய வேண்டாம் என்று கேட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார், (உ-எ)

## கொழும்பு காப்புறுதி கிளையில் கொள்ளை

கொழும்பு, ஏப்ரல் 6
கொழும்பு, முத்தையா வீதியில் தேசியக் காப்புறுதிக் கூட்டுத்தாபனக் கிளைக்குள் புகுந்த ஆயுதம் தரித்தவர்கள் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையடித்துச் சென்றனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுதந் தரித்த இரண்டு பேர் கூட்டுத்தாபனக் கட்டடத்தினுள் புகுந்து பணத்தை கொள்ளையடித்தனராம்.

இச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் இடம் பெற்றதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## தெற்கிலும்....

மருந்து இருந்த பெட்டி ஒன்றை ஆயுதப்படையினர் கைப்பற்றினர்

★ கொழும்பு நகரில் பல இடங்களில் நேற்றுக் காலை குண்டுகள் வெடிக்க வைக்கப் பட்டன. உயிர்ச் சேதங்களோ உடைமைகளுக்குச் சேதமோ ஏற்படவில்லை.

★ தென் மாகாணத்தில் பரவலாக சிவப்பு மற்றும் வெள்ளைக் கொடிகள் காணப் பட்டன.

★ குருணாகலையில் அரசு பஸ் ஒன்று இனந்தெரியாதோரால் எரிக்கப்பட்டது.

★ பெரும்பாலான அரசு அலுவலகங்கள் மூடப்பட்டன.

சில இடங்களில் நண்பகலுடன் அரசு அலுவலகங்கள் மூடப்பட்டன.

வர்த்தக நிலையங்கள் மூடப் பட்டன.

★ வாகன நடமாட்டங்கள் குறைந்தும், துருப்புக்களின் நடமாட்டம் அதிகரித்தும் இருந்தது.

★ பரவலாக தென்பகுதியில் இடம்பெற்ற வன்செயல்களில் பாதுகாப்புப்படையைச் சேர்ந்த 11 பேர் காயம் அடைந்தனர்.

★ மக்கள் மத்தியில் பட்டாசுப் பார்சல் ஒன்றை வீசிய ஒரு நபர் கைது செய்யப்பட்டார்.

★ பிங்கிரிய சந்தியில் நேற்று அதிகாலை பொலீஸ்-ராணுவ கூட்டு ரோந்து மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் தீவிரவாதிகள் பலர் இறந்து இருக்கலாம் அல்லது காயம் அடைந்திருக்கலாம் என்று அரசு தரப்பினர் தெரிவித்தனர். 'இச்சம்பவத்தின் போது பொலீஸ் அதிகாரி ஒருவரும், படை வீரர் ஒருவரும் காயமடைந்தனர்.

★ மீகொல்லாகம பொலீஸ் நிலையம் மீது நேற்று அதிகாலை மூன்று மணியளவில் இனந்தெரியாத தீவிரவாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பொலீஸார் திருப்பிச் சுட்டதை அடுத்து அவர்கள் பின்வாங்கினர்.

★ கொஸ்வத்த என்னும் இடத்தில் அரசாங்க பஸ் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 6 பயணிகள் காயமடைந்தனர்.

★ கெஹெல்ல என்ற இடத்தில் டிரக் வண்டி ஒன்று தாக்கப்பட்டது.

### வரட்சி----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
உதவிப் பணிப்பாளர்களின் கண்காணிப்பின் கீழ் உதவி அரச அதிபர் அலுவலகங்கள் மூலம் இந்த நிதிதொகை விநியோகிக்கப்படும் (உ-எ)

## விபத்தில் சிக்குண்டவர் மரணம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6
தனியார் பஸ் ஒன்றினால் மோதுண்ட பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர் ஒருவர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

பருத்தித்துறை கல்லூரி வீதியைச் சேர்ந்த கே. தியாகரட்ணம் [வயது 42] என்பவரே மரணமானவராவர்.

கடந்த மாதம் 17 ஆம் திகதி இவர் தொழிற்சாலைக்கு முன்பாக சைக்கிளில் சென்ற போது விபத்து நடந்தது. [ஒ-10]

## பஸ் சாரதி சுட்டுக் கொலை

கொழும்பு, ஏப்ரல் 6
அரசுக்கு சொந்தமான பஸ் ஒன்றின்மீது' இனந்தெரியாத நபர்கள் மறைந்திருந்து சுட்டதில்பஸ்ஸின்சாரதியான வீரக்கொடி என்பவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்,

கடந்த செவ்வாய் காலை குளியாப்பிட்டி பொலீஸ் பகுதியில் இத்தாக்குதல் இடம் பெற்றது.

பஸ்ஸின் கண்டக்டரான ஆனந்த.... என்பவர் படுகாயமடைந்தார். (உ-எ)

## புனர்வாழ்வு....

டபிள்யு ஏ/89/5 ஆம் இலக்கக் கடிதம் ஒன்றின் மூலம் மிகத் தெளிவு படத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் புனர் வாழ்வுத் திட்டத்தின் கீழ் வழங்கப் படும் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம், உற்பத்தித் தொழில் திறன் நிவாரணம் ஆகியவற்றுக்கு மனுச் செய்த பல ஓய்வூதியக்காரர்களின் விண்ணப்பங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் நிராகரிக்கப் பட்டன.

ஓய்வூதியக்காரர்களும் அரசாங்க உத்தியோகத்தர்கள் என்பதால் அவர்கள் இந்த நிவாரண உதவிகளைப் பெற அருகதை இல்லாதவர்கள் என்று இங்குள்ள அதிகாரிகள் பலரும் வியாக்கியானம் தெரிவித்திருந்தார்கள்.

ஆனால் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளர் தமது கடிதத்தில் பின் வருமாறு நேர்மாறாகத் தெரிவித்திருக்கிறார்;-

விவசாய உற்பத்தி தொழில் திறன் உதவி 4,000 ரூபா சம்பந்தமாக–

இப்போது அமுலில் உள்ள புனர்வாழ்வு உதவித் திட்டங்களில் இருந்து ஓய்வூதியக் காரர்கள் விலக்கப்படவில்லை.

ஓய்வூதியக் காரர்கள், அரசாங்க உத்தியோகஸ்தர்களாகக் கருதப்படாமையால் ஏனைய உதவித் திட்டங்களின் கீழ் அவர்களுக்குப் பண உதவி வழங்கப்பட்டுள்ளது.

இது விடயமாக, நிவாரணம் பெறும் பொருட்டு, மேற்கொண்டு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருடன் தொடர்பு கொள்ளவும்- என்று உள்ளது. (அ)

### ஐக்கிய அரபு எமிரேற்சில்

## வெளிநாட்டு தொழிலாளர் 47 பேருக்கு எய்ட்ஸ்

டுபாய், ஏப் 6
ஐக்கிய அரபு எமிரேற்ஸ் ஸில்கடந்த ஆண்டு 47 வெளிநாட்டு தொழிலாளர் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டனர்.

அனைவரும் சொந்த நாடுகளுக்கு உடனடியாக திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர் என்று காலிஜ் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டது.

இதைத் தொடர்ந்து வெளிநாட்டுத் தொழிலாளரை எய்ட்ஸ் தடுப்பு பரிசோதனைக் குட்படுத்தும் நடவடிக்கைகளை அரசு தீவிரமாக்கியுள்ளது.

எய்ட்ஸ் காரணமாக திருப்பி அனுப்பப்பட்ட தொழிலாளர் எண்ணிக்கை நாடுகள் வாரியாக இங்கு தரப்படுகிறது:

| | |
|---|---|
| பாகிஸ்தான்- | 15 |
| இந்தியா- | 09 |
| பாலஸ்தீனம்- | 07 |
| எகிப்து- | 03 |
| சூடான்- | 03 |
| ஜோர்தான்- | 02 |
| ஓமான்- | 02 |
| தான்சானியா- | 02 |
| லிபியா- | 01 |
| சீனு- | 10 |
| பிரான்ஸ்- | 10 |
| கென்யா- | 10 |

### அதிகாரப் பகிர்வு இன்னும் இல்லை -ஜனாதிபதி

## மாகாண சபைகளுக்கு அதிகாரம்; கொழும்பில் இன்று மாநாடு

கொழும்பு, ஏப்ரல் 6
முதலமைச்சர்கள் மற்றும் மத்திய அமைச்சர்கள் கலந்து கொள்ளும் மாநாடு ஒன்று இன்று வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி பிரேமதாஸ இம்மாநாட்டைக் கூட்டுகிறார்.

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள் பற்றி இம்மாநாட்டில் ஆராயப்படும் என்று ஜனாதிபதி பிரேமதாஸா அறிவித்திருக்கிறார்.

இது குறித்து பரீட்சார்த்த அடிப்படையில் அமுல்படுத்தப்படவுள்ள செயற் திட்டம் ஒன்று பற்றியும் இம்மாநாட்டில் ஆராயப்படும் என்றும் ஜனாதிபதி பிரேமதாஸா கூறியிருக்கிறார்.

கடந்த சனிக்கிழமை கிரந்துருக்கோட்டையில் நடந்த இளைஞர் விழாவில் பேசும் போது அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபைகள் இயங்கத் தொடங்கிவிட்டன; ஆனால் முறையான அதிகாரப் பகிர்வு இன்னும் இடம்பெறவில்லை.-

மத்தியில் குவிந்துள்ள அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டாக வேண்டும்.-

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட நாள் தொடக்கம் இது குறித்து நான் செயற்பட்டு வருகின்றேன் – என்றும் ஜனாதிபதி அப்போது தெரிவித்திருந்தார். ஒ-எ)

## வழிபாட்டு ஸ்தலங்கள் முற்றுகை

கொழும்பு, ஏப்ரல் 6
தென்பகுதியில் நடந்த தேடுதல் வேட்டையின் போது வழிபாட்டு ஸ்தலங்கள் பலவும் முற்றுகையிடப் பட்டன என்று கொழும்பில் சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தநர். [ஒ-எ]

## மரண அறிவித்தல்கள்

### குலசிங்கம் ராஜ்குமார்

(Union Trust and Investments Ltd, Jaffna Branch)

கட்டுவன் தெல்லிப்பழையைச் சேர்ந்த குலசிங்கம் ராஜ்குமார் 28-3-89 இல் அகால மரணமடைந்தார். இவர் கந்தையா குலசிங்கம் (A. G. A.'S Office, Uduvil), குணஞானவதி குலசிங்கம் (Medical Research Institute, Colombo) ஆகியோரின் மூத்த புதல்வனும் ஷகீலா, சுரேஷ்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 31-3-89 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்றது. இம்மரணச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
குலசிங்கம் குடும்பத்தினர்.

மல்லாகம் வீதி,
கட்டுவன். [95]

### திரு. நமசிவாயம் வீரசிங்கம்

(யோகர்)

நீர்வேலி, அகிலேசர் வளவு, திரு. நமசிவாயம் வீரசிங்கம் [தபால் அதிபர், கண்டுக்குளி தபாலகம்] 04-04-1989 அன்று சிவபதமடைந்துள்ளார். அன்னார் காலஞ் சென்ற திரு. தம்பு நமசிவாயம், திருமதி இரத்தினம் நமசிவாயம் ஆகியோரின் கனிஷ்ட புத்திரனும், திருமதி புஷ்பதேவியின் பிராண நாயகனும், யசோதாவின் [மாணவி, கண்டுக்குளி மகளிர் கல்லூரி] ஆசைத் தந்தையும், சரஸ்வதி, தேவராஜன், பஞ்சாட்சரம், அமரர் நவரத்தினம், இராமநாதன், ஆகியோரின் உடன் பிறப்பும், பல்வைத்திய கலாநிதி தில்லைவாசன் [கொழும்பு], திருமதி தில்லைவாசன், அமரர் க.பஞ்சாட்சரம், பத்மதேவி, புஷ்பமலர், சரஸ்வதிதேவி, விமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை 06. 04. 1989 பி. ப. 1-00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: த. ந. பஞ்சாட்சரம்.

'அகிலேசர் வளவு''
நீர்வேலி. [C/2073]]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 06 - 04 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org